# தேவ நாராயண துர்க் ஸ்ரீ லஷ்மி யோக ஸ்ரீ லஷ்மி போக நரசிம்ம ஸ்வாமி ஆலயம்

சாந்திப்பிரியா




மற்றுமொரு நரசிம்மர் ஆலயம் தும்கூரில் உள்ளது. பெங்களூரில் இருந்து சுமார் 68 கி.மீ தொலைவில் உள்ள தும்கூரில் இருந்து 24 கி.மீ தொலைவில் உள்ள அந்த ஆலயமும் மலை உச்சி மீதே உள்ளது. ஆலயத்தின் பெயர் ஸ்ரீ லஷ்மி யோக ஸ்ரீ லஷ்மி போக நரசிம்ம ஸ்வாமி ஆலயம். அதன் கதை இது.

இந்த இடம் ஒவ்வொரு யுகத்திலும் ஒவ்வொரு பெயரைக் கொண்டு இருந்தது. கிருதே யுகத்தில் உகேலாத்ரி எனவும், திரேதா யுகத்தில் சிம்ஹாத்ரி எனவும், துவாபர யுகத்தில் சித்தாகிரி எனவும் கலியுகத்தில் காரி கிரி எனவும் பெயர் பெற்றது. மூன்றடுக்காக உள்ள தேவநாராயண துர்கா என்ற மலைப் பகுதியில் கீழ்புறம் போக நரசிம்மஸ்வாமி ஆலயமும் மலையின் யோக நரசிம்மஸ்வாமி ஆலயம் மலை மீதும் உள்ளதாம். அதைத் தவிற அங்கு காந்திராவ் நரசராஜா என்பவர் கட்டியதாக கூறப்படும் பழுதடைந்த லஷ்மி நரசிம்மஸ்வாமி ஆலயத்தை மைசூர் மன்னரான கிருஷ்ணராஜ உடையார் III என்பவர் சீர்படுத்தினாராம்.

கலியுகத்தில் காரி கிரி எனப் பெயர் பெற்றதின் காரணம் என்ன? அது குறித்து கூறப்படும் இரண்டொரு கதைகள் சுவாரஸ்யமானவை.





தேவ லோகத்தில் தேவதத்தா மற்றும் தனன்ஜயா என்ற இரு கந்தர்வ சகோதரர்கள் இருந்தனர். அவர்கள் பாடல் புலமை மிக்கவர்கள். அவர்கள் பாடும் பொழுது அனைவரும் மெய் மறந்து அதை ரசிப்பது உண்டு. அத்தனை இனிமையான குரல், பாடல்கள். ஆனால் என்ன காரணத்தினாலோ பிருகு முனிவர் மட்டும் அவர்களுடைய பாடல்களில் மயங்கவில்லை. அவர்கள் இசை ஞானம் அற்றவர்கள் எனக் குறைக் கூறி வந்தார். அதனால் கோபமுற்ற அந்த சகோதரர்கள் பிருகு முனிவரை அவமானப்படுத்தினார். கோபமுற்ற பிருகு முனிவர் அவர்கள் பூலோகத்தில் மலைகளாகப் பிறக்க வேண்டும் என சாபமிட்டு விட்டார். அதைக் கேட்டு மிரண்டு போனவர்கள் அவரிடம் மன்னிப்புக் கேட்க அவரும் மலையாகப் பிறக்காமல் அவர்களில் ஒருவர் காரி எனவும், மற்றோருவர் கிரி எனவும் பெயர் கொண்ட யானைகளாக அந்த மலையில் பிறப்பார்கள் எனவும் அதன் பின் அவர்கள் சாப விமோசனம் பெறுவார்கள் எனவும் கூறினார். அவர்களும் அந்தப் பெயரில் யானைகளாக அங்கு பிறந்ததினால் அந்த மலை காரிகிரி எனப் பெயர் கொண்டது.

அந்த இடத்திற்கு அப்படி ஒரு பெயர் வந்ததிற்காக கூறப்படும் மற்றும் ஒரு கதை என்ன எனில் ஹோய்சாலா மன்னர்கள் ஆட்சியில் ஒரு மதம் பிடித்த யானை அந்தப் பகுதியில் இருந்த மக்களை துன்புறுத்தி வந்ததாகவும்,அப்படி ஒரு நாள் அது அட்டகாசம் செய்த பொழுது அதை சேவகர்கள் துரத்த அது வெறிபிடித்து ஓடி மலை மீது ஏறிச் சென்று தப்ப முயன்ற பொழுது கால் இடறி விழுந்து அங்கு இறந்து விட்டதாம். ஆகவே அதற்கு யானை மலை என்ற பெயரான காரிகிரி என பெயர் ஏற்பட்டதாம்.





வைனதேயன்                    கருடர் மீது போக நரசிம்மர்

காரிகிரியை குசுமாத்ரி எனவும் கூறுவர். ஏன் எனில் மகாவிஷ்ணு அந்த இடத்தில் அட்டகாசம் செய்து கொண்டு இருந்த புண்ரிகா என்ற அசுரனைக் கொன்ற பொழுது தேவர்கள் அவர் மீது மலர் மாறிப் பொழிந்தனர். ஆகவே அது குசுமாத்ரி ( மலர் பொழிந்த இடம் )என்ற பெயர் பெற்றது.

ஆலயம் உள்ள இடம் பல பெருமைகள் பெற்ற இடம். அந்த இடத்திற்கு ரிஷிகள், முனிவர்கள் என பலரும் வந்து தபம் செய்துள்ளனர். ஒரு புராணக் கதையின்படி இராமபிரான் இலங்கை செல்லும் முன் அங்கு வந்து தங்கி இருந்ததாகவும், அப்போது ஒரு குறிப்பிட்ட பாறை மீது அமர்ந்தபடி தன் நெற்றியில் திலகம் இட்டுக் கொள்வார் எனவும், ஒரு முறை திலகம் இட்டுக் கொள்ள தண்ணீர் கிடைக்காமல்போக தன்னுடைய அம்பினால் அந்த பாறையில் ஒரு ஓட்டைப் போட்ட பொழுது அதில் இருந்து கங்கை நீராக வெளி வந்துப் பாய்ந்தாளாம். ஆகவே அந்த இடத்தின் பெயர் நமது சிமுன்னி அதாவது இயற்கை நீர்வீழ்ச்சி என ஆயிற்றாம். இன்னமும் இராமபிரான் அமர்ந்ததாகக் கூறப்படும் அந்தப் பாறையில் இருந்து நீர் வருவதைக் காணலாம். அந்த இடத்தில் இராமரின் பாதச் சுவடு இருப்பதாகவும் கூறுகின்றனர்.
அப்படிப்பட்ட அந்தப் புனித இடத்தில்தான் சதுர்முக பிரும்மதேவன் நரசிம்மருக்கு ஆலயம் எழுப்பினாராம். அந்த இடத்தில் சுமார் பத்தாயிரம் வருடங்கள் கடுமையான தவத்தில் பிரும்மா இருந்த பொழுது மகாலவிஷ்ணு அவர் முன் யோக லஷ்மி நரசிம்மராக தோன்றினார். ஆகவே பிரும்மா நரசிம்மரைத் துதித்து அவருக்குப் பாத பூஜை செய்ததாக ஒரு ஐதீகம் உண்டு. ஆந்த ஆலயத்தின் எதிரில் நரசிம்ம தீர்த்தம் என்ற குளம் உள்ளது. ஆலயத்திற்கு வரும் பக்தர்கள் அந்த நீரை எடுத்து தம்மீது புரோஷ்ஷணம் செய்து கொள்வது பழக்கம்.அது

போல இந்த இடத்தில் பராசர முனிவர் தனக்கு குழந்தை வேண்டும் என தவம் இருக்க, விஷ்ணுவே அவருக்கு மகனாக பிறந்தார் என்ற கதையும் உண்டு.

ஆலயத்தில் கருட ஆழ்வாருக்கும் மாடப்பள்ளி நாச்சியாருக்கும் சன்னதிகள் உள்ளன. பெரிய மற்றும் சிறிய திருவடிகள் மலையடிவாரத்தில் யுத்தம் செய்ததை இராமபிரான் பார்த்துக் கொண்டு நிற்பது போன்ற 9-10 அடி உயர சிற்பமும் அங்கு உள்ளது.



வருடம் ஒரு முறை நரசிம்ம ஜெயந்தி என்ற பெயரில் நரசிம்ம அவதார தினம் விமர்சையாகக் கொண்டாடப்படுகின்றது. மலையை சுற்றி கிரி பிரதர்ஷணம் செய்வதை புண்ணியமாகக் கருதகின்றனர். ரத ஊர்வலத்தின் பொழுது எங்கிருந்தோ ஒரு பருந்து பறந்து வந்து இரதத்தின் மீது பறந்துவிட்டுச் செல்வது இன்றும் நடக்கின்றது என்பது மிகவும் ஆச்சரியமான உண்மை.

ஆலய விலாசம்:

Sri T Narasimha Bhattar ( Yoga Narasimha Swamy Temple ) 0816 - 2265456, Varadharaja Bhattar ( Bhoga Narasimha Swamy Temple) 0816 - 2265452 or Executive Officer ( Common for both the temple) 0816 – 2265455

---

நன்றி: இந்த கட்டுரையில் காணப்படும் மூலச் செய்திகள் அனைத்திற்கும் ஆதாரம் திரு லஷ்மி நாராயணன் ஸ்ரீதர் அவர்களின் இணையதள செய்திகளே. http://www.karnatakavaishnavatemples.net என்ற இணையதளத்தில் உள்ளவற்றை தமிழில் பிரசுரித்துக் கொள்ள அனுமதி தந்துள்ள அவருக்கு என் நன்றி. திரு ஸ்ரீதரின் முகவரி:

Lakshminarasimhan Sridhar, SRIHARITHA [Behind Water Tank], I Floor, Sathyam Street, I Cross, Munieshwara Swamy Layout, Munnekolala, Marthahalli Post, Bangalore: 560037, INDIA

Tel:- Resi: 91 80 28475017, Medical Shop : 91 80 41169839, Cell: 91 9448322378

E-mail- srihi@vsnl.com